மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 08 ஆம் நாள் வியாழக்கிழமை
இ.ம.எண்.02/2023
அ.வ.எண்.101/2023

S.K.மாதேசன் ... மனுதாரர்/வாதி

/எதிராக/

தேன்மொழி ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு கடந்த 04.06.2024 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.அருணாசலம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.காமராஜ் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்,

## உத்தரவு

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம், கட்டளை 39 விதிகள் 1, 2 மற்றும் பிரிவு 151–ன் கீழ் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : –

(i) வாதி/மனுதாரரால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி பிரதிவாதி/ எதிர்மனுதாரருக்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரரும், S.K.கந்தசாமியும் சகோதரர்கள் ஆவர். S.K.கந்தசாமியின் மனைவி எதிர்மனுதாரர் ஆவார். மனுதாரரும், S.K.கந்தசாமியும் கறிகடையை கூட்டாக நடத்தி வந்து, அதிலிருந்து வரும் வருமானத்தை கொண்டு தாவா சொத்துக்கள் கிரயம் பெறப்பட்டது. அதாவது தாவா 1வது அயிட்ட சொத்தை கடந்த 13.02.1995ம் தேதிய கிரய ஆவண எண்.189/1995ன்படி ஒரு குருநாதன் மற்றும் வெங்கடேசன் ஆகியோரிடமிருந்தும், தாவா 2வது அயிட்ட சொத்தை கடந்த 27.09.1995ம் தேதிய ஆவண எண் 1268/1995ன்படி ஒரு ராமசந்திரன் மற்றும் குணசேகரன் ஆகியோரிடமிருந்தும், தாவா

3 வது அயிட்ட சொத்தானது கடந்த 10.02.2017 ம் தேதிய கிரய ஆவண எண்.312/2017 ன் படி ஒரு சீனிவாசன் என்பவரிடமிருந்தும் மனுதாரரால் உரிய விலை கொடுத்து தனது சகோதரர் S.K.கந்தசாமியின் பெயரில் கிரயம் பெறப்பட்டது.

(ii) மேற்படி சொத்துக்கள் அனைத்தும் மனுதாரரின் சகோதரர் S.K.கந்தசாமியின் பெயரில் கிரயம் பெறப்பட்டிருந்தாலும், மேற்படி சொத்துக்கள் மனுதாரருக்கும், அவரது சகோதரருக்கும் கூட்டாக பாத்தியப்பட்ட சொத்துக்களாகும். மேற்படி சொத்துக்களுக்கு மனுதாரர் கிரயத்தொகை செலுத்தியதால்தான் மேற்படி சொத்துக்களின் அசல் கிரய ஆவணங்கள் மனுதாரரிடம் உள்ளது. மனுதாரரின் சகோதரர் S.K.கந்தசாமி இறக்கும் வரை மேற்படி சொத்துக்கள் அனைத்தையும் மனுதாரரும், அவரது சகோதரரும் பாகப்பிரிவினை செய்து கொள்ளாமல் கூட்டாக அனுபவித்து வந்தனர். எதிர்மனுதாரர் மனுதாரரின் சகோதரரிடம் கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரிந்து சென்ற நிலையில், மனுதாரரின் சகோதரரை அவரது இறுதிக்காலம் வரை மனுதாரரே பராமரித்து வந்தார். எதிர்மனுதாரர் மனுதாரரின் சகோதரருடன் வாழாத போதிலும், அவரது சட்டப்படியான மனைவி என்ற அடிப்படையில் மனுதாரரின் சகோதரருக்கு பாத்தியப்பட்ட பகுதி சொத்துக்களை பொறுத்து மட்டுமே உரிமையுடைவர் ஆகிறார்.

(iii) இந்நிலையில் மனுதாரரின் சகோதரர் S.K.கந்தசாமியின் பெயரில் தாவா சொத்துக்களின் கிரய ஆவணங்கள் உள்ளதை சாதகமாக பயன்படுத்தி எதிர்மனுதாரர் தாவா சொத்துக்களை வில்லங்கப்படுத்த முயற்சித்து வருகிறார். இந்நிலையில் தாவா சொத்துக்களில் மனுதாரருக்குரிய பாகத்தை மனுதாரருக்கு அளிக்க கோரி பஞ்சாயத்தார் மூலம் கடந்த 18.09.2022 ம் தேதியில் கேட்டதற்கு எதிர்மனுதாரர் மறுத்துவிட்டதால் மனுதாரர் அ.வ.எண்.285/2022 என்ற வழக்கை பாகப்பிரிவினை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது. மேலும் எதிர்மனுதாரர் தாவா சொத்துக்களில் உள்ள வீடுகளில் கட்டுமானங்கள் கட்டவும், 3 ம் நபர்களுக்கு வாடகைக்கு விடவும், தாவா சொத்துக்களின் பௌதீக தன்மைகளை மாற்றவும் முயற்சித்து வருவதால் மனுதாரர் எதிர்மனுதாரருக்கு எதிராக இவ்வழக்கை தாக்கல் செய்து அதில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

<u>2) பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட பதிலுரை, குறிப்பாணையின் பேரில் இம்மனுவின் எதிர்மனுதாரரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:–</u>

(i) மனு பொய்யானது. சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரின் உறவுமுறையும், கடந்த 01.01.2022 ம் தேதியன்று எதிர்மனுதாரரின் கணவர் இறந்துவிட்டார் என்பதும் சரியே. தாவா சொத்துக்கள் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரருக்கு பாகம் பிரிக்கப்படாத பொதுவான சொத்துகள் என்பதும், தாவா சொத்துக்கள் அனைத்தும் மனுதாரரின் பெயரில் கிரயம் பெறப்பட்டது என்பதும், மேற்படி சொத்துக்கள் மனுதாரருக்கும், அவரது சகோதரர் S.K.கந்தசாமிக்கும் கூட்டாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்பதும் பொய்யாகும். அதேபோல் தாவா சொத்துக்களை மனுதாரரால் விலை கொடுத்து எதிர்மனுதாரரின் கணவர் பெயரில் கிரயம் பெற்றார் என்பது பொய்யானதாகும்.

(ii) உண்மையில் தாவா சொத்துக்களை எதிர்மனுதாரரும், அவரது கணவரும் தங்களது சொந்த வருமானத்திலிருந்து எதிர்மனுதாரர் பெயரில் கிரயம் பெற்றனர். கடந்த 01.01.2022 ம் தேதியில் எதிர்மனுதாரரின் கணவர் எதிர்மனுதாரரை வாரிசாக விட்டுவிட்டு இறந்துவிட்டார். எதிர்மனுதாரரின் கணவர் இறந்த பின்பு மனுதாரர் எதிர்மனுதாரரின் வீட்டிலிருந்து தாவா சொத்திற்குரிய ஆவணங்களை திருடிவிட்டார். இது தொடர்பாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்து விசாரணை நடைபெற்றால் அதிலிருந்து தப்பிக்க தவறான சங்கதிகளுடன் பல வழக்குகளை தாக்கல் செய்து வருகிறார். எதிர்மனுதாரருக்கு குழந்தை இல்லாததை பயன்படுத்தி தாவா சொத்துக்களை அபகரிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் பாகப்பிரிவினை வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

(iii) தாவா சொத்துக்களை விருப்பம் போல் அனுபவிக்க எதிர்மனுதாரருக்கு உரிமை உள்ளது. பொய்யான சங்கதிகளுடன் பல்வேறு வழக்குகளை மனுதாரர் தாக்கல் செய்து தாவா சொத்துக்களை எதிர்மனுதாரர் அனுபவிப்பதற்கு மனுதாரர் இடையூறு செய்து வருகிறார். ஒருவேளை எதிர்மனுதாரரின் செயல்களால் மனுதாரர் பாதிக்கப்பட்டிருந்தால் மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் தற்போது நிலுவையிலுள்ள அ.வ.எண்.252/2022 என்ற பாகப்பிரிவினை வழக்கிலேயே இடைக்கால பரிகாரங்கள்

கோரி ஒரு மனுவை தாக்கல் செய்திருக்கலாம். ஆனால் மனுதாரரை துன்புறுத்த வேண்டும் என்ற ஒரே நோக்கத்தை தவிர, தவறான சங்கதிகளுடன் புதியதாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். எனவே இம்மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர் கூறியுள்ளார்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. மனுதாரர் தரப்பில் சாட்சியங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தவில்லை. மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சியங்கள், சான்றாவணங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தவில்லை.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர் தரப்பில் மனுதாரரும், S.K.கந்தசாமியும் சகோதரர்கள் ஆவர். S.K.கந்தசாமியின் மனைவி எதிர்மனுதாரர் என்றும், மனுதாரரும், S.K.கந்தசாமியும் கறிகடையை கூட்டாக நடத்தி வந்து, அதிலிருந்து வரும் வருமானத்தை கொண்டு தாவா சொத்துக்கள் கிரயம் பெறப்பட்டது என்றும், அதாவது தாவா 1வது அயிட்ட சொத்தை கடந்த 13.02.1995ம் தேதிய கிரய ஆவண எண்.189/1995ன்படி ஒரு குருநாதன் மற்றும் வெங்கடேசன் ஆகியோரிடமிருந்தும், தாவா 2வது அயிட்ட சொத்தை கடந்த 27.09.1995ம் தேதிய ஆவண எண் 1268/1995ன்படி ஒரு ராமசந்திரன் மற்றும் குணசேகரன் ஆகியோரிடமிருந்தும், தாவா 3வது அயிட்ட சொத்தானது கடந்த 10.02.2017ம் தேதிய கிரய ஆவண எண்.312/2017ன் படி ஒரு சீனிவாசன் என்பவரிடமிருந்தும் மனுதாரரால் உரிய விலை கொடுத்து தனது சகோதரர் S.K.கந்தசாமியின் பெயரில் கிரயம் பெறப்பட்டது என்றும் கூறியுள்ளது தெரியவருகிறது.

(ii) மேற்படி சொத்துக்கள் அனைத்தும் மனுதாரரின் சகோதரர் S.K.கந்தசாமியின் பெயரில் கிரயம் பெறப்பட்டிருந்தாலும், மேற்படி சொத்துக்கள் மனுதாரருக்கும், அவரது

சகோதரருக்கும் கூட்டாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும், மேற்படி சொத்துக்களுக்கு மனுதாரர் கிரயத்தொகை செலுத்தியதால்தான் மேற்படி சொத்துக்களின் அசல் கிரய ஆவணங்கள் மனுதாரரிடம் உள்ளது என்றும், மனுதாரரின் சகோதரர் S.K.கந்தசாமி இறக்கும் வரை மேற்படி சொத்துக்கள் அனைத்தையும் மனுதாரரும், அவரது சகோதரரும் பாகப்பிரிவினை செய்து கொள்ளாமல் கூட்டாக அனுபவித்து வந்தனர் என்றும், எதிர்மனுதாரர் மனுதாரரின் சகோதரரிடம் கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரிந்து சென்ற நிலையில், மனுதாரரின் சகோதரரை அவரது இறுதிக்காலம் வரை மனுதாரரே பராமரித்து வந்தார். எதிர்மனுதாரர் மனுதாரரின் சகோதரருடன் வாழாத போதிலும், அவரது சட்டப்படியான மனைவி என்ற அடிப்படையில் மனுதாரரின் சகோதரருக்கு பாத்தியப்பட்ட பகுதி சொத்துக்களை பொறுத்து மட்டுமே உரிமையுடைவர் என்றும் கூறியுள்ளது தெரியவருகிறது.

(iii) இந்நிலையில் மனுதாரரின் சகோதரர் S.K.கந்தசாமியின் பெயரில் தாவா சொத்துக்களின் கிரய ஆவணங்கள் உள்ளதை சாதகமாக பயன்படுத்தி எதிர்மனுதாரர் தாவா சொத்துக்களை வில்லங்கப்படுத்த முயற்சித்து வருகிறார் என்றும், இந்நிலையில் தாவா சொத்துக்களில் மனுதாரருக்குரிய பாகத்தை மனுதாரருக்கு அளிக்க கோரி பஞ்சாயத்தார் மூலம் கடந்த 18.09.2022ம் தேதியில் கேட்டதற்கு எதிர்மனுதாரர் மறுத்துவிட்டதால் மனுதாரர் அ.வ.எண்.285/2022 என்ற வழக்கை பாகப்பிரிவினை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றும், மேலும் எதிர்மனுதாரர் தாவா சொத்துக்களில் உள்ள வீடுகளில் கட்டுமானங்கள் கட்டவும், 3ம் நபர்களுக்கு வாடகைக்கு விடவும், தாவா சொத்துக்களின் பௌதீக தன்மைகளை மாற்றவும் முயற்சித்து வருவதால் மனுதாரர் எதிர்மனுதாரருக்கு எதிராக இவ்வழக்கை தாக்கல் செய்து அதில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(iv) எதிர்மனுதாரர் தரப்பில் தாவா சொத்துக்களை எதிர்மனுதாரரும், அவரது கணவரும் தங்களது சொந்த வருமானத்திலிருந்து எதிர்மனுதாரர் பெயரில் கிரயம் பெற்றனர் என்றும், கடந்த 01.01.2022ம் தேதியில் எதிர்மனுதாரரின் கணவர் எதிர்மனுதாரரை

வாரிசாக விட்டுவிட்டு இறந்துவிட்டார் என்றும், எதிர்மனுதாரரின் கணவர் இறந்த பின்பு மனுதாரர் எதிர்மனுதாரரின் வீட்டிலிருந்து தாவா சொத்திற்குரிய ஆவணங்களை திருடிவிட்டார் என்றும், இது தொடர்பாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்து விசாரணை நடைபெற்றால் அதிலிருந்து தப்பிக்க தவறான சங்கதிகளுடன் பல வழக்குகளை தாக்கல் செய்து வருகிறார் என்றும், எதிர்மனுதாரருக்கு குழந்தை இல்லாததை பயன்படுத்தி தாவா சொத்துக்களை அபகரிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் மேட்டுர் சார்பு நீதிமன்றத்தில் பாகப்பிரிவினை வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(v) மேலும் தாவா சொத்துக்களை விருப்பம் போல் அனுபவிக்க எதிர்மனுதாரருக்கு உரிமை உள்ளது என்றும், பொய்யான சங்கதிகளுடன் பல்வேறு வழக்குகளை மனுதாரர் தாக்கல் செய்து தாவா சொத்துக்களை எதிர்மனுதாரர் அனுபவிப்பதற்கு மனுதாரர் இடையூறு செய்து வருகிறார் என்றும், ஒருவேளை எதிர்மனுதாரரின் செயல்களால் மனுதாரர் பாதிக்கப்பட்டிருந்தால் மேட்டுர் சார்பு நீதிமன்றத்தில் தற்போது நிலுவையிலுள்ள அ.வ.எண்.252/2022 என்ற பாகப்பிரிவினை வழக்கிலேயே இடைக்கால பரிகாரங்கள் கோரி ஒரு மனுவை தாக்கல் செய்திருக்கலாம் என்றும், ஆனால் மனுதாரரை துன்புறுத்த வேண்டும் என்ற ஒரே நோக்கத்தை தவிர, தவறான சங்கதிகளுடன் புதியதாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் கூறியுள்ளது தெரிய வருகிறது.

(vi) வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு கூட்டு பாத்தியதை உள்ள சொத்துக்களை எதிர்மனுதாரர் வில்லங்கப்படுத்தவும், அவற்றின் அமைப்பு மாற்றவும், வாடகைக்கு விடவும் முயற்சிப்பதாக கூறி எதிர்மனுதாரருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி மனுதாரர்/வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. அதே சமயத்தில் எதிர்மனுதாரர் தரப்பில் தாவா சொத்துக்களில் மனுதாரருக்கு கூட்டு பாத்தியதை உள்ளதாக கூறுவது தவறானது என்றும், வாரிசுரிமைப்படி எதிர்மனுதாரருக்கே தாவா சொத்துக்கள் பூரணமாய் பாத்தியப்பட்டது என்றும், பொய்யான காரணங்களை கூறி பல்வேறு வழக்குகளை தாக்கல் செய்து, எதிர்மனுதாரர் தாவா சொத்துக்களை அனுபவிப்பதற்கு மனுதாரர் இடையூறு செய்து வருகிறார் என்றும் தெரிவித்துள்ளது தெரியவருகிறது.

(vii) இச்சூழ்நிலையில் மனுதாரர் தாவாவில் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், இந்த இடைநிலை மனுவில் கோரப்பட்டுள்ள இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரமும் ஒரே மாதிரியான தன்மை கொண்டதாகவும், ஒத்த இயல்புடையதாகவும் உள்ளது தெரியவருகிறது. எனவே மேற்படி பிரச்சனைகளையும், அதன் தகுதிப்பாடுகளையும் இடைநிலை மனுவில் தீர்மானிப்பது என்பது ஒரு சிறிய வழக்கு விசாரணை நடத்துவதற்கு ஒப்பானதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

(viii) மேலும் இவ்வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளையும், தரப்பினர்களது வாதங்களையும் கருத்தில் கொள்கையில் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரதான பிரச்சனையானது, தாவா சொத்துகளில் மனுதாரர் சட்டப்படியான சுவாதீன அனுபவத்தில் உள்ளாரா? என்பதும், மனுதாரரின் அமைதியான சுவாதீன அனுபவத்திற்கு எதிர்மனுதாரர் இடையூறு செய்தாரா? என்பதும், தாவா சொத்துக்களில் மனுதாரருக்கு கூட்டு பாத்தியதை உள்ளதா? என்பதும், எதிர்மனுதாரர் கூறுவது போல் எதிர்மனுதாரருக்கு தாவா சொத்துக்கள் வாரிசுரிமைப்படி பூரணமாய் பாத்தியப்பட்டதா? என்பதுமே ஆகும்.

(ix) மேற்படி சங்கதிகள் மற்றும் பிரச்சனைகள் குறித்து தரப்பினர்கள் முன் வைக்கும் சாட்சியங்களின் அடிப்படையிலேயே அவற்றை தீர்மானிக்க இயலும். மேலும் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனையானது சங்கதி தொடர்புடைய எழுவினாவாக உள்ளது என தெரியவருகிறது. இவ்வழக்கானது பதிலுரை தாக்கல் செய்யப்பட்டு, எழுவினாக்கள் வனையப்பட்டு, விசாரணைக்காக தயார் நிலையில் உள்ளதை கருத்தில் கொள்கையில், மேற்படி எழுவினாவை வழக்கு விசாரணையின் பொழுது தரப்பினர்களால் முன்னிலைப்படுத்தப்படும் வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களின் அடிப்படையிலேயே தீர்மானிக்க இயலும் எனவும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

(xi) மாண்பமை உச்சநீதிமன்றத்தால் "*Anand Prasad Agarwalla /Vs/ Tarkeshwar Prasad & Ors", reported in "2001 (5) SCC 578"* என்ற வழக்கில்,

> *"It may not be appropriate for any Court to hold mini trial at the stage of grant of temporary injunction."*

என்ற சட்டநிலைப்பாடு வகுத்துரைக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட சட்ட நிலைப்பாட்டின் அடிப்படையில் மனுதாரரால் காண்பிக்கப்பட்டுள்ள முதல் தோற்ற வழக்கானது இருதரப்பு ஆவணங்களின் அடிப்படையில் வழக்கு விசாரணையின் மூலம் தான் தீர்மானிக்க இயலும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. இச்சூழ்நிலையில் மாண்பமை உச்சநீதிமன்றம் மேற்கண்ட வழக்கில் கூறியுள்ளபடி, இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க ஒரு சிறிய வழக்கு விசாரணை நடத்த வேண்டிய அவசியமில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, இம்மனு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 08 ம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN Digitally signed by R MANIVARMAN Date: 2024.08.08 17:53:40 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்:– இல்லை</u>

<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:–</u>

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 29.09.2022 | அ.வ.எண்.285/2022 ன் வழக்குரை | சான்றிட்டநகல் |
| ம.சா.ஆ.2 | 29.09.2022 | அ.வ.எண்.285/2022 ல் உள்ள இ.ம.எண்.02/2022 ன் மனு, பிரமாணப்பத்திரிக்கை | சான்றிட்டநகல் |
| ம.சா.ஆ.3 | 21.02.2023 | வழக்கறிஞர் அறிவிப்பு | நகல் |
| ம.சா.ஆ.4 | | அஞ்சலக ஒப்புகை அட்டைகள் (2) | அசல் |
| ம.சா.ஆ.5 | 27.03.2023 | மனுதாரர், நங்கவள்ளி உதவி காவல் ஆய்வாளருக்கு எழுதிய புகார்மனு | நகல் |

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை</u>

R MANIVARMAN Digitally signed by R MANIVARMAN Date: 2024.08.08 17:53:46 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.